# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 24.01.2023 supeedsam.com supeedsam@gmail.com



இலங்கை தமிழ் அரசுக்கட்சி

தமிழனின்
தன்மான கட்சி 'இலங்கை
தமிழ் அரசுக் கட்சி

தன்மானச் சின்னம்
தங்கள் 'வீடு'
''வெற்றியின் சின்னம்
வீட்டுச்சின்னம்
பற்றிக் கொள்ளுங்கள்
பண்பான தமிழர்களே'

''உங்கள் வாக்கு
உங்கள் வீட்டுக்கே'


# சம்பந்தன் நீக்கம் கதிர் அறிவிப்பு!



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருந்து சம்பந்தன் விலக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் (திங்கட்கிழமை) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதோ இ.கதிர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு மிகுந்த பின்னடைவை சந்தித்து இருந்தது. இந்த நிலையில் தற்போது தமிழரசுக் கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறி தனித்துவமாக தேர்தலில் போட்டி

02 ஆம் பக்கத்தில்...

# சம்பந்தனே கூட்டமைப்பின் தலைவர்!

## ரேலோவுக்குச் சி.விகே. பதிலடி

ஊடக அறிக்கை மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனக் கூற முடியாது. சம்பந்தனே கூட்டமைப்பின் தலைவராகத் தற்போதும் பதவி வகிக்கின்றார்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று தனது அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே

02 ஆம் பக்கத்தில்...

# தேர்தல் நடைபெறுவதில் சிக்கல்?




02 ஆம் பக்கத்தில்...

# இன்று சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்கின்றார் அலி சப்ரி!



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று சவுதி அரேபியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் அல் செளதின் அழைப்பின் பேரில் அவர் விஜயம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று (23) முதல் 27 ஆம் திகதி வரை சவூதி அரேபியாவில் தங்கியிருந்து, இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்

# ராஜபக்சவினருக்கும் மறக்க முடியாத பாடத்தை மக்கள் புகட்டுவர் சம்பிக்க ரணவக்க!



பின்வாசல் வழியாக அரசின் ஆட்சியை முன்னெடுக்கும் ராஜபக்சவினருக்கு இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மறக்க முடியாத பாடத்தை மக்கள் புகட்டுவார்கள்

02 ஆம் பக்கத்தில்...

# தேர்தலை ஒத்திவைக்க 7 தடவை அரசாங்கம் கையாண்ட தந்திரோபாயங்கள் தோல்வியடைந்துவிட்டன - பீரிஸ்



கடந்த இரண்டரை மாதங்களில் உள்ளூராட்சித் தேர்தலை தடுப்பதற்கு அரசாங்கம் % முறை முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவை அனைத்தும் தோல்வியடைந்துள்ளதாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை எனவும், தேர்தல் ஆரம்பமாகியுள்ள நிலையில் புதிய ஆணைக்குழுவை நியமிக்க முற்பட்டால் அது அரசியல் நெறிமுறைகளுக்கு பொருந்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தினத்தை பெயரிடும் போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் அங்கு இல்லை என்ற வாதத்தை அரசாங்கம் எழுப்புவது தவறு என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரி

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302



Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma :34598 25605: cicero


# உள்நாட்டு எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிப்பு !

எதிர்வரும் பெப்ரவரி மாதம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை மீண்டும் அதிகரிக்கலாம் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்பு காரணமாக எதிர்வரும் மாதத்தில் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படலாம் என நிறுவனம் தெரிவித்துள்ளது



# மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிமனைக்கான புதிய பணிப்பாளராக எஸ்.எம்.எம். அமீர்








(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப்பணிமனைக்கானபுதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள எஸ் எம்எம். அமீர் 23.01.2023 சம்பிரதாய பூர்வமாக கடமைப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

இக்கல்வி வலயத்தின் பணிப்பாளராக கடந்த நான்கு வருடங்கள் பணிபுரிந்த டாக்டர் செய்யித் உமர் மௌலானா சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளராகவும் சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளராக கடமையிலிருந்த எஸ்எம்எம். அமீர் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்கும் ஒத்துமாறல் பெற்றுள்ளனர்.

புதிய வலக்கல்விப்பணிப்பாளரை மலர் மாலை அணிவித்து வரவேற்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு பிரதிக்கல்விப்பணிப்பாளர் வீரீஎம். அஜ்மீர் தலைமையில் ஏறாவூரிலுள்ள வலயக்கல்விப்பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் உள்ளிட்டங்களாக கல்விப்பணிமனையின் அனைத்து உத்தியோகத்தர்களும் சம்மாந்துறை வலயத்தின் கல்வியதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

புதிய வலயக்கல்விப்பணிப்பாளர் வரவேற்பு நிகழ்வின் பின்னர் அலுவலகத்தின் அனைத்து கிளைகளையும் பார்வையிட்டார்.

வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ் எம்எம். அமீர் ஏலவே இக்கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப்பணிப்பாளராக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2007 ஆம் ஆண்டில் காத்தான்குடி , ஏறாவூர் மற்றும் கோறளைப்பற்று மேற்கு ஆகிய கல்விக் கோட்டங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இக்கல்வி வலயம் ஆரம்பகாலத்தில் கபொத சாதாரணதர பரீட்சையில் 3 வருடகாலமாக முதலிடத்தைப் பிடித்திருந்து பின்னர் 2018 ஆம் ஆண்டில் 57 ஆம் இடத்திற்குப் பின் தள்ளப்பட்டிருந்தது. இந்நிலையில் முன்னாள் பணிப்பாளர் உமர்மௌலானாவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட அயராத முயற்சியின் பயனாக தற்போது தேசிய மட்டத்தில் பத்தாம் இடத்திற்கு முன்னேறியுள்ளதாக பிரதிக்கல்விப்பணிப்பாளர் எம் எச்எம். றமீஸ் தெரிவித்தார்.

# கரைசேர கடலில் நீந்தி வந்தவர் கடலுக்கு இரையானார்

## பேசாலையில் சம்பவம்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பேசாலை வடகடலில் இலுவைப்படகு மூலம் மீன்பிடிக்காகச் சென்றுவர்கள் இலுவை படகை கரையிலிருந்து சற்று தூரத்தில் நங்கூரமிட்டுவிட்டு கரைக்கு நீச்சல் மூலம் திரும்பியவர்களில் ஒருவர் கடலக்கு இரையானார்.

இவ் சம்பவம் சனிக்கிழமை (21) இரவு இடம்பெற்றுள்ளது.

இவ் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது

கடந்த சனிக்கிழமை (21) மன்னார் பேசாலை கடற்கரை துறையிலிருந்து இலுவைப் படகு மூலம் மீன்பிடிக்காக மூன்று மீனவர்கள் நண்பகல் இரண்டு மணியளவில் கடலுக்குச் சென்றுள்ளனர்.

அன்றையத்தினம் இவர்கள் கரையிலிருந்து கடலின் 12 கிலோ மீற்றர் தூரம் சென்றபின் கடலில் இலுவை மீன்பிடி மடியை மீன்பிடிக்காக கடலில் வீசியுள்ளனர்.

ஆனால் மீன்பிடி மடிவலை சேதடைந்தமையால் மீன் அகப்படாத நிலையில் இவர்கள் வலையை சீர்செய்துக் கொண்டு பின் மீண்டும் வலையை கடலில் இறக்கியுள்ளனர்.

ஆனால் இரண்டாவது முறையும் இவர்களுக்கு இறால் மீன் அகப்படவில்லை.

இதைத் தொடர்ந்து இவர்கள் கரைக்கு திரும்புவது என தீர்மானித்துக் கொண்டு கரைக்கு திரும்பியுள்ளனர்.

இவர்கள் சனிக்கிழமை (21) இரவு 10 மணியளவில் கரைக்கு திரும்பிய பின் கரையிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் இலுவைப் படகுக்கு நங்கூரமிடப்பட்டவிட்டு மூவரும் கரைக்கு வருவதற்காக நீந்தி வந்துள்ளனர்.

இதில் இருவர் கரைக்கு வந்து சேர்ந்தபோதும் ஒருவரைக் காணவில்லையென படகு உரிமையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

காணாமல் போனவரைத் தேடி உடனடியாக இரவு 10.30 மணியிலிருந்து சுமார் நான்கு மணி வரை சக மீனவர்கள் அப்பகுதிக்குள் தேடுதல் நடாத்தியும் அவர் கண்டு பிடிக்க முடியவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து ஞாயிறு (22) காலைத் தொடக்கம் தொடர்ச்சியாக மீனவர்கள் தேடுதல் நடாத்தியதில் திங்கள் கிழமை (23) காலை 0% மணியளவில் இவரின் உடல் கடலில் கண்டுபிடிக்கப்பட்டு கரை சேர்க்கப்பட்டது.

இறந்தவர் கிளிநொச்சி அக்கராயன்குளம் ஆரோக்கியபுரத்தைச் சேர்ந்த கஸ்பார் அலெக்ஷன் (வயது 26) எனவும் இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையெனவும் இவர் ஐந்து மாதங்களுக்கு முன்பு பேசாலைக்கு தொழிலுக்காக வந்தவர் எனவும் முசலி பிரதேச மரணவிசாரனை அதிகாரி ஏ.ஆர்.நஸீர் அவர்களின் மரண விசாரனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரனையின்போது இறந்தவரின் மனைவி . படகில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் சாட்சியம் அளித்துள்ளனர்.

பேசாலை பொலிசார் இது தொடர்பாக விசாரனையை மேற்கொண்டு வருகின்றனர்.

இறந்தவரின் உடல் உடற்கூற்று பரிசோதனைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# காரைதீவில் 12 கட்சிகள் இரண்டு சுயேட்சைகள்! 196 வேட்பாளர்கள் களத்தில்..

(வி.ரி.சகாதேவராஜா)




அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபைத் தேர்தலுக்காக 12கட்சிகளும் 2சுயேட்சை அணிகளும் களமிறங்கியுள்ளன.

11உறுப்பினர்களைப் பெறுவதற்காக 196 வேட்பாளர்கள் களத்தில் இறங்கி உள்ளனர்.


தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ,தேசிய மக்கள் கட்சி,ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ,ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ,ஐக்கிய மக்கள் சக்தி ,இலங்கை தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி,ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய 12 கட்சிகள் போட்டியிடுகின்றன.

செல்வநாயகம் ரசிகரன் தலைமையிலான சுயேட்சை குழு, அப்துல் மஜீத் யாஹிர் தலைமையிலான சுயேட்சைக் குழு ஆகிய இரண்டு சுயேட்சை அணிகளும் போட்டியில் நிற்கின்றன.

காரைதீவு வரலாற்றில் இதுவே ஆகக் கூடிய வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற தேர்தலாக உள்ளது.

# இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இணைந்து போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இணைந்து போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளதாக தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும்பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி நுவரெலியா மாநகர சபை, ஹட்டன்- டிக்கோயா நகர சபை, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்தை, அம்பகமுவை பிரதேசசபைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் யானை சின்னத்திலும் தலவாக்கலை-லிந்துலை நகர சபை, நுவரெலியா, மஸ்கெலியா, அக்கரப்பத்தனை, நோர்வூட், கொட்டகலை பிரதேச சபைகளுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சேவல் சின்னத்திலும் போட்டியிட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இணைந்து போட்டியிட்டு அனைத்து சபைகளையும் கைப்பற்றி வெற்றுப்பெற போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர்தலை ஒத்திவைக்க 7 தடவை...

வித்துள்ளார்.

கொழும்பில் இன்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி உறுப்பினர்களை நியமிப்பது ஒன்றே இத்தேர்தலின் நோக்கமல்ல, அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாட இதுவே சிறந்த சந்தர்ப்பம் எனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ராஜபக்சவினருக்கும் மறக்க முடியாத...

என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பில் அச்சம் கொண்டுள்ள அரசாங்கம், அதனை ஒத்திவைக்க பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த முயற்சி இன்னும் முடியவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இம்முறை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ராஜபக்சவினருக்கும் மறக்க முடியாத பாடத்தை மக்கள் புகட்டுவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சம்பந்தன் நீக்கம் கதிர்...

யிட்டுவதற்கு தயாராகி வருகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 49 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் தந்தை செல்வாக்கு பின்னர் அந்த கட்சி செயலிழக்கப்பட்டு ஒரு சந்தர்ப்பவாத அரசியல் போக்கோடு செயல்பட்டது.

நான் நினைக்கின்றேன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகும் வரைக்கும் தமிழரசு கட்சி ஒரு செயலிழந்த கட்சியாகவே பார்க்கப்பட்டது தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்கான அங்கீகாரத்தை வழங்கி வீட்டுச்சின்னத்தை ஒரு பொதுச்சின்னமாக தலைவர் அவர்கள் அங்கீகாரம் வழங்கி நாங்கள் ஒரு தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தினோம்.

இன்று தமிழரசுக் கட்சி தனித்துவமாக முடிவை எடுத்து ஒரு தொழில்நுட்பம் முறை என்றும் ராஜதந்திர முறை என்றும் கருத்துக்களை மக்கள் மத்தியில் கூறிக் கொண்டு, வீட்டுச் சின்னம் தான் தமிழ் மக்களுடைய சின்னம் என்றும், தமிழரசுக் கட்சி தான் தமிழ் மக்களுடைய தாய் கட்சி என்றும் வலியுறுத்தி ஊடகங்களிலே செய்து வெளியிட்டு வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை பொறுப்பும் ஊடகப் பேச்சாளர் பொறுப்பும் எங்களிடமே இருக்கின்றது என்று தமிழரசு கட்சி கூறி வருகின்றது. உண்மையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐந்து கட்சிகளைக் கொண்டு தற்போதைய காலத்தின் தேவை உணர்ந்து ஒரு புதிய பரிணாம வளர்ச்சி கண்டு இங்குநிற்கின்றது.

அந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ரெலோ, பிளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயக போராளிகள் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி என ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக குற்றுவிளக்கு சின்னத்தில் பிரதேச சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகி வருகின்றது.

இந்த சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தனித்துவமாக தமிழரசு கட்சி இல்லாமல் செயல்பட்டு வருகின்றது இது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருந்து சம்பந்தன் ஐயா விலக்கப்படுகின்றார் ,கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியில் இருந்து சுமந்திரன் விலக்கப்படுகின்றார்.

சம்பந்தன் ஐயா வெறுமனே திருகோணமலை மாவட்டத்தின் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகவும், சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்ற நிலை இங்கே உருவாகி இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் என்பது கூட்டுத் தலைமைத்துவமாக மிக விரைவில் அறிவிக்கப்படும்.

உண்மையாக தலைவர் அவர்களுடைய சிந்தனைக்கும் தலைவர் அவர்களுடைய நம்பிக்கைக்கும் மிக மோசமான ஒரு குரோதத்தனமான வேலையை செய்து இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி இருக்கின்றது.

இலங்கை அரசாங்கத்தினுடைய ஒரு நோக்கமாக இருக்கின்றது இந்த கூட்டமைப்பையும் அழித்து மிதவாத அரசியல்வாதிகளையும் தங்கள் வசப்படுத்தி தமிழ்த் தேசியத்தை சிதைக்கும் நடவடிக்கைகளுக்கு உண்மையாக தமிழரசுக் கட்சி துணைபோகி நிற்கின்றது.

இந்த நிலையில் இன்று தமிழரசு கட்சி மக்களுக்கு செய்திருக்கின்ற மிக மோசமான துரோகத்தனமான செயற்பாட்டை மக்கள் மிகத் தெளிவாக புரிந்து கொண்டு வருகின்ற தேர்தல்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க வேண்டும் என்பதை நான் இந்த இடத்தில் வலியுறுத்தி கூறுகின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக கருத்துக்களை கூறுவதற்கும் மக்களுக்கு நாங்கள் பணியாற்றுவதற்கும் முழுமையான உரிமை உரித்து உடையவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள்.

அந்த வகையிலேயே இந்த கருத்தை மக்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்என தெரிவித்துள்ளர்.

## சம்பந்தனே கூட்டமைப்பின்...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில நாட்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் செயற்பாடுகள் தொடர்பான வேறுபட்ட கருத்துக்கள் ஊடகங்களில் செய்திகளாக வெளிவந்துள்ளன.

அவை பற்றி விமர்சனம் செய்ய நாங்கள் விரும்பவில்லை. ஆனால், இருந்தாலும் கூட நேற்றைய தினம் ரெலோவின் பேச்சாளர் எனச் சொல்லப்படுபவர், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர்பதவியில் சம்பந்தன் தற்போது இல்லை எனவும், அந்தப் பதவி செயலற்றுப் போய்விட்டது எனவும், சம்பந்தனின் தலைவர் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனவும் ஊடகங்கள் முன்னிலையில் கூறியுள்ளார்.

கூட்டமைப்பிலிருந்து பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சி இன்னமும் வெளியேறவில்லை. ஆனால், கூட்டமைப்பில் பங்காளிக் கட்சிகளாக இருந்த இரண்டு கட்சிகள் (ரெலோ, புளொட்) கூட்டமைப்பிலிருந்து வெளியேறி புதிய கூட்டணியை அமைத்துள்ளன. இந்த இரண்டு கட்சிகளும் (ரெலோ, புளொட்) காலகாலமாகக் கூட்டமைப்புடன் உரசப்பட்டுக் கொண்டிருந்தன. தற்போது உள்ளூராட்சிசபைத்தேர்தலையொட்டிஅந்த இரண்டுகட்சியினரும்கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிட்டார்கள். அது அவர்களுடைய உரிமை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராகவும் சம்பந்தனே தற்போதும் பதவி வகிக்கின்றார். அதுதான் உண்மை. ஊடக அறிக்கை மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனக் கூற முடியாது.

விரும்பினால் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம் அல்லது அவர் விரும்பினால் தாமாகவே பதவியிலிருந்து விலகலாம். அதைவிடுத்துக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனச் சொல்வது நீண்ட வரலாற்றைக் கொண்டு ஒருதலைவரை அவமதிக்கின்ற ஒரு கூற்றாகும். அதை நான் கடுமையாக ஆட்சேபிக்கின்றேன் - என்றார்.

## தேர்தல் நடைபெறுவதில்...

நெருக்கமான சூழ்நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கும் எந்தவொரு தீர்மானமும் செல்லுபடியாகாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள போதிலும், தேர்தல் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை எனவும், அதற்கான வர்த்தமானி அறிவித்தல் இன்னும் வெளியிடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் திகதியை ஊடகங்களுக்கு அறிவிப்பது அல்ல, வர்த்தமானி மூலம் அறிவிப்பதே சட்டம் எனவும் மஹாநாம ஹேவா மேலும் தெரிவித்துள்ளார்.

21ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்வரும் புதன்கிழமை அரசியலமைப்பு பேரவைக் கூட்டம் நடைபெறவுள்ள சூழலில் தேர்தல்கள் ஆணைக்குழுவும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் வர்த்தமானி அறிவித்தல் கண்டிப்பாக வெளியிடப்பட வேண்டும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை கோரும் வர்த்தமானியில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐந்து பேரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்வதற்கும் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் திகதியை தீர்மானித்தல் போன்ற முக்கிய பணிகளுக்கு முழு ஆணைக்குழுவும் தேவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் திகதி வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை எனக் கூறுவதன் மூலம் மறைமுகமாக என்ன தெரிவிக்கப்படுகிறது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# 2023 உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூர் அதிகாரசபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்



(ஹஸ்பர்)

2023 உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூர் அதிகாரசபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 22 வும் சுயேட்சைக்குழுக்கள் 16வும் 178 வேட்புமனுக்களுக்கான கட்டுப்பணங்களை செலுத்தியதாகவும் இவற்றுள் 162 வேட்புமனுக்கள் தாக்கல் செலுத்தப்பட்டதாக திருகோணமலை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளரும் மாவட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலருமான ஆர். சசீலன் தெரிவித்தார்.

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களுள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஏழு மற்றும் சுயேட்சை குழுவொன்றின் வேட்புமனுக்கள் உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாநகர சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 15, சுயேட்சைகுழுக்கள் 04 வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தன. இவற்றுள் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பு மனு உரிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை இன்மையாலும் ரூபராஜ் ஜனோஜ் தலைமையிலான சுயேட்சைக்குழுவின் வேட்புமனு உரிய நேரத்திற்கு சமர்ப்பிக்காமை காரணமாகவும் நிராகரிக்கப்பட்டன.மேலும் தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர் மிஹ்ராப் இவாத் அகமட்டின் வேட்பாளர் அந்தஸ்த்து சத்தியப்பிரமான உறுதியுரை இன்மையாலும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வேட்பாளர்களான நேசதுரை சங்கிர்த்தா , ஜெகநாதன் நவதீசன் ஆகியோர் பூரணமற்ற சத்தியப்பிரமாண உறுதியுரையை வழங்கியமையாலும் அவர்களின் வேட்பாளர் அந்தஸ்த்தும் நிராகரிக்கப்பட்டன. இதன்படி திருகோணமலை மாநகர சபைக்கு மொத்தமாக 473 வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர்.

கிண்ணியா நகர சபைக்காக 13 அரசியல் கட்சிகள் மாத்திரம் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன. இவற்றுள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனு உரிய பெண் வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு போட்டியிடும் மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 192 ஆகும்.

வெருகல் பிரதேச சபைக்காக 13 அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை சமர்ப்பித்தன. இச்சபைக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பாளர் அப்துல்லா அஸீராவின் வேட்பாளர் அந்தஸ்த்து சத்தியப்பிரமாண உறுதியுரை இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு 20% வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

சேருவல பிரதேசசபைக்கு 10அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன. இதில் இலங்கை தமிழரசுக்கட்சி தாக்கல் செய்த வேட்புமனு உரிய பெண் வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டன. இங்கு 171 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கந்தளாய் பிரதேச சபைக்கு 13 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதனுள் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் உள்ளடங்கும்.இச்சபைக்காக வேட்புமனு தாக்கல் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரசின் வேட்புமனு உரிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை இன்மை காரணமாகவும் சுதந்திர ஐக்கிய முன்னணியின் வேட்புமனு வேட்பாளர்களின் எண்ணிக்கை பூரணப்படுத்தப்படாமை காரணமாகவும் நிராகரிக்கப்பட்டன. இச்சபைக்கு 264 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மொரவெவ பிரதேச சபைக்கு 0% வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு மொத்தம் 133 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கோமரங்கடவெல பிரதேச சபைக்கு 05 அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்களும் பதவிசிறீபுர பிரதேச சபைக்கு 07 அரசியல் கட்சிகளும் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை முறையே 95, 133 ஆகும்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு 16 அரசியல் கட்சிகளும் 05 சுயேட்சை குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன. இவற்றுள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்புமனு வேட்புமனுவில் கட்சியின் பெயர் இடத்தில் குறிப்பிடப்படாமை காரணமாக நிராகரிக்கப்பட்டது. மேலும் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் காளிராசா ராஜு மற்றும் சங்கித்தா மோகனதாசின் வேட்பாளர் அந்தஸ்த்து பூரணமற்ற சத்தியப்பிரமானம் காரணமாக நிராகரிக்கப்பட்டது. இச்சபைக்காக 418 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

குச்சவெளி பிரதேச சபைக்காக 16 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.இதில் இரண்டு சுயேட்சை குழுக்களும் அடங்கும். அகில இலங்கா தமிழ் காங்கிரசின் வேட்புமனு உரிய எண்ணிக்கையான வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 285 ஆகும்.

தம்பலகாமம் பிரதேச சபைக்காக 11 வேட்புமனுக்கள் அரசியல் கட்சிகளால் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு மொத்தம் 209 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

மூதூர் பிரதேச சபைக்கு 15 அரசியல் கட்சிகளும் 03சுயேட்சை குழுக்களும் உள்ளடங்கலாக 18 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 456 ஆகும்.

கிண்ணியா பிரதேச சபைக்கு 09 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இச்சபைக்கு வேட்புமனு தாக்கல் செய்த ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் அன்சார் இஜாஸ் பூரணமற்ற சத்தியப்பிரமாணம் காரணமாக வேட்பாளர் பட்டியலில் அவரின் பெயர் நிராகரிக்கப்பட்டது.

இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 143ஆகும்.

13 உள்ளூராட்சி சபைகளுக்குமாக 3179 வேட்பாளர்கள் மொத்தமாக போட்டியிடுகின்றர்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் தமிழ் தேசிய பொங்கல் விழா கிரானில் நடைபெற்றது







(க.ருத்திரன்)



மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் தமிழ் தேசிய பொங்கல் விழா கிரானில் நடைபெற்றது.

வட்டாரக்கிளைத் தலைவர் எஸ்.சன்முகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கி.துரைராஜசிங்கம், பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், முன்னாள் கிழக்குமாகாண சபை உறுப்பினர் மா.நடராஜா, மாநகர முதல்வர் தி;.சரவணபவன், வாலிபர் முன்னனி தலைவர் கி.சேயோன் என முக்கிய் அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டது.கணபதி பூஜாதுரந்தரர் சிவஸ்ரீ மு.சண்முகம் ஆசியுரை நிகழ்த்தினார்.கிரானைச் சேர்ந்த 19% % ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் தமிழரசு கட்சிக்கு தொண்டாற்றிய கூட்டணி அப்பா என்று அழைக்கப்பட்ட அமரர் பாக்கியராசா அவர்களுக்கு நினைவுச் சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

'பூத்தது தமிழ் புத்தாண்டு புதுமைகள் பொலிகமாதோ 'என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. இவ் கவியரங்கத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கி.துரைராஜசி;கம் தலைமை வகித்தார். கதிரவன் பட்டிமன்ற குழுவினரால் பட்டிமன்ற நிகழ்வு நடைபெற்றது.பட்டி மன்றக் குழுவினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் இறுதியில் தமிழரசுக் கட்சியில் அங்கத்துவம் படிவம் வழங்கப்பட்டு புதிய அங்கத்துவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

இந் நிகழ்வானது எதிர்வரும் 2023.03.09 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்சியின் சார்பில் வாழைச்சேனை பிரதேச சபைக்காக போட்டியிடும் வேட்பாளர்களை கௌரவித்து மக்கள் முன் அறிமுகப்படுத்தும் பிரச்சார கூட்டமாகவும் அமைந்திருந்தது.

# வாக்குகளை சிதறடிக்கவே 196 வேட்பாளர்கள்: தேசியத்துடன் பயணியுங்கள்!

## தவிசாளர் ஜெயசிறில் வேண்டுகோள்



( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச சபையின் 11 உறுப்பினர்களுக்காக 196 வேட்பாளர்கள் களமிறங்கி உள்ளனர். இங்கு வாக்குகளை சிதறடித்து எமது இருப்பை கபளீகரம் செய்யவே சதி செய்கின்றனர்.எனவே மக்கள் நிதானமாக சிந்தித்து தமிழ் தேசியத்துடன் பயணியுங்கள்.

இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபை வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஊடக மாநாட்டில் வேண்டுகோள் விடுத்தார்.

அம்பாரை ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்..

சமகால தேர்தல் முறைமை காரணமாக தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடுகின்றது. காரைதீவில் இம்முறை மைதானத்தில் விளையாடுவது போன்று 14அணிகள் சார்பில் 196பேர் களத்தில் இறக்கப்பட்டுள்ளார்கள்.

எதற்காக இவ்வளவு பெரிய தொகையினர் இறக்கப்பட்டுள்ளார்கள் என்பதை சிந்திக்க வேண்டும்.

எமது இருப்பை இல்லாமல் செய்யும் நோக்கில் சதி நடக்கிறது.

அபிவிருத்தி செய்யவா? அல்லது எல்லைகளை பாதுகாக்கவா? அல்லது மக்கள் சேவை செய்யவா? என்பதெல்லாம் புரியாமல் இருக்கின்றது .

மக்கள் கஷ்டப்பட்ட நேரத்தில் இவர்கள் எவரையும் காணவில்லை .கடந்த காலத்தில் மொட்டில் வந்தார்கள் யானையில் வந்தார்கள் . மஹிந்த என்றார்கள் கோட்டா என்றார்கள். மக்களுக்கு ஆனது ஒன்றுமில்லை.

ஆகவே ,மக்களே போலியை கண்டு ஏமாறாதீர்கள். தேசியத்தோடு பயணியுங்கள். இப்படை தோற்பின் எப்படை வெல்லும்? வெற்றி நிச்சயம்.



கொட்டகலை யதன்சைட் தோட்டத்திலிருந்து கொட்டகலை நகரை நோக்கி பயணித்த சிறிய லொறி ஒன்று நேற்று முன் தினம் (22) மாலை பாலம் ஒன்றின் மீது கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். குறித்த லொறியானது டெவோன் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தின் பாதுகாப்பு வேலியை உடைத்து சுமார் 20 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியது. இவ்விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளுக்கு வழிவிடச் சென்ற வேளையில் இவ்விபத்து நேர்ந்துள்ளதுடன், விபத்தில் லொறிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

தலவாக்கலை பி.கேதீஸ்

# முஸ்லிம் பெரும்பான்மை சபைகள் அனைத்தையும் மு.கா. கைப்பற்றும்: பிரதிப் பொருளாளர் யஹியாகான் உறுதி

(செயிட் அஸ்லம்)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே கைப்பற்றும் என அக்கட்சியின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத்தாக்கல் நிறைவுற்ற நிலையில், அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது;

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுமாயின் மு.கா.வின் அபரிதமான வெற்றி தவிர்க்க முடியாத ஒன்றாக மாறும்.

முஸ்லிம் காங்கிரஸ் எமது தாய்க் கட்சி, அந்தக் கட்சி மட்டும்தான் முஸ்லிம்களின் கட்சி என்பதை உணர்ந்த பலர் இன்று கட்சியோடு மீளிணைந்து வருகின்றனர்.

மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் பல விட்டுக்கொடுப்புக்களுடன் கட்சியை பலப்படுத்தி வருகின்றார்.

கல்முனை மாநகர சபை தேர்தல் விடயம் நீதிமன்றம் வரை சென்றுள்ளதால், இப்பகுதி மு.கா. போராளிகள் மாவட்டத்தின் ஏனைய சபைகளுக்கான தேர்தல் விடயத்தில் கரிசனையோடு செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

முஸ்லிம்களின் கட்சி என்று தம்மைத் தாமே மார்தட்டிக் கொள்ளும் ஓரிரு கட்சிகள் இன்றைய சூழ்நிலையில் வலுவிழந்து உட்பூசல் அதிகரித்து, வேட்பாளர் இன்றி திணறிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் அக்கட்சிகள் மீது, அக்கட்சிகளின் ஆதரவாளர்களே அதிருப்தியடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.



இவ்வாறான நிலையில் மு.கா மட்டுமே பூரணமாக வேட்பாளர்களை நியமித்து வேட்புமனுக்களையும் தாக்கல் செய்துள்ளது.

எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அம்பாரை மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பெரும்பான்மை சபைகளையும் கைப்பற்றுவது மட்டுமன்றி மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் இச்சாதனை நிலை நாட்டப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறேன்- என்றும் யஹியாகான் மேலும் தெரிவித்துள்ளார்.

# நுவரேலியா உள்ளூராட்சி வேட்புமனு தாக்கல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)



நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட 108 வேட்பு மனுக்களில் 17 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவட்தாட்சி அதிகாரியும் நுவரெலியா மாவட்ட செயலாளருமான நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

அதில் 85 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 06 சுயேச்சைக் குழுக்கள் உட்பட 91 வேட்புமனுக்கள் தேர்தலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நுவரெலியா மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 10 வேட்பு மனுக்களில் உபாலி தயானந்த தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளன. கொட்டகலை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 11 வேட்பு மனுக்களில் ராமன் திருச்சந்தூரன் தலைமையிலான சுயேட்சை குழு மற்றும் 'அபிநவ நிவாஹல் முன்னணி', 'ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி', 'சுதந்திர மக்கள் முன்னணி''தேசிய ஜனநாயக முன்னணி' மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 05 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நோர்வூட் பிரதேச சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட சந்தனம் பிரான்சிஸ் தலைமையிலான சுயேச்சைக் குழு மற்றும் 'அபிநவ நிவாஹல் முன்னணி', 'ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி' உட்பட சுயேச்சைக் குழுக்களின் 03 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நுவரெலியா பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 10 வேட்பு மனுக்களில் சந்தனம் பிரான்சிஸ் தலைமையிலான சுயேட்சைக் குழு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட 02 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஹங்குரங்கெத்த பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 08 வேட்பு மனுக்களில் புதிய லங்கா சுதந்திரக் கட்சி வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளன.அக்கரபத்தனை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 09 வேட்பு மனுக்களில் ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளன. வலப்பனை பிரதேசசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 09 வேட்பு மனுக்களில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளன. அம்பகமுவ பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 09 வேட்பு மனுக்களில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளன. கொத்மலை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 வேட்பு மனுக்களில் தேசிய ஜனநாயக முன்னணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளன.

மஸ்கெலியா பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 12 வேட்பு மனுக்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளன. தலவாக்கலை - லிந்துல நகரசபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 07 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அங்கு எந்தவொரு வேட்பு மனுவும் நிராகரிக்கப்படவில்லை. ஹட்டன் -டிக்கோயா நகரசபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 07 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு நிராகரிக்கப்படவில்லை. இதன்படி நுவரெலியா மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் மூலம் 1345 வேட்பாளர்களும் போனஸ் மூலம் 1130 வேட்பாளர்களும் உட்பட 2475 பேர் தேர்தலில் போட்டியிடவுள்ளனர் என நந்தன கலபட தெரிவித்தார்.

# மக்களுக்கு பொருளாதார ரீதியான அபிவிருத்தி முன்னெடுப்பே அவசியம்

(பாறுக் ஷிஹான்)




மாட்டு இறைச்சியின் விலையை உடனடியாக 1200 ருபாவாக குறைக்கவுள்ளோம்

எதிர்வரும் காலங்களில் சம்மாந்துறை பிரதேச சபையை எமது அணி கைப்பற்றியதுடன் மாட்டு இறைச்சியின் விலையை உடனடியாக 1200 ருபாவாக குறைக்கவுள்ளோம்.தமிழ் பேசும் மக்கள் அரசியல் அனாதைகளாக தற்போது இருக்கின்ற நிலையில் அதனை நிவர்த்தி செய்ய நாம் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என என நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகரும் சமூக சேவையாளருமான கலாநிதி யூ.கே. நாபீர் குறிப்பிட்டார்

உள்ளூராட்சி தேர்தல் -2023 தொடர்பில் அம்பாறை ஊடக மையத்தில் இன்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

உள்ளூராட்சி மன்ற வேட்புமனுத்தாக்கல் நிறைவுற்றுள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை தேர்தல் தொகுதியில் சம்மாந்துறை பிரதேச சபைக்காக கட்டுப்பணம் மற்றும் வேட்புமனுத்தாக்கல்களை மேற்கொண்டுள்ளோம்.எதிர்வரும் மார்ச் மாதம் 09 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடவுள்ளோம்.சம்மாந்துறை சகல வளங்களையும் கொண்ட பிரதேசமாகும்.இங்கு தமிழ் முஸ்லீம் ஏனைய சமூக அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளோம்.

கடந்த 2 தசாப்தங்களாக பல அரசியல் வாதிகளுக்கு அமுக்க குழுக்கள் போல் அழுத்தங்களை கொடுத்து வருகின்றோம்.சம்மாந்துறை பகுதிகளில் பல கட்சிகள் கால் ஊன்றி காணப்பட்ட போதிலும் எதுவித உரிமைகளையோ அல்லது அபிவிருத்தியையோ பெற்றதாக நாம் காணவில்லை.எனவே எதிர்வரும் காலங்களில் எமது பகுதி பிரச்சினைகளை நாம் இனங்கண்டுள்ளோம்.தற்போது மக்களுக்கு தேவையானது கொள்கை ரீதியான அரசியல் அல்ல.தற்போது மக்களுக்கு வாழ்வாதாரம் சார்ந்த அபிவிருத்தியே குறிக்கோளாக காணப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைக்கு எவ்வாறு முகம் கொடுக்க முடியும் என்ற குறிக்கோளில் எமது மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.எனவே தான் எதிர்வரும் தேர்தலில் மக்களின் பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கு எதிர்பார்த்து களமிறங்கியுள்ளோம்.100 வீதம் இப்பிரச்சினைகளை தீர்க்க முடியாத நிலையிலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்காவது அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அத்துடன் எமது திட்டங்கள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக அறிவிக்கவுள்ளோம்.

குறிப்பாக சகல மக்களாலும் தற்போது நுகரப்படுகின்ற இறைச்சி வகைகளில் மாட்டு இறைச்சியின் விலை ஏனைய பிரதேசங்களை விட சம்மாந்துறை பகுதியில் அதிகளவில் காணப்படுகின்றது.இங்கு விலை அதிகரிப்பினால் மாட்டு இறைச்சியை விற்பவர்களை குறை கூற முடியாது.பிரதேச சபையின் குத்தகை பெறுமானம் அதிகமாக இருப்பதே விலையேற்றத்திற்கு பிரதான காரணமாகும்.இதனால் மாட்டின் விலை எற்றப்படுகின்றது.

நாளடைவில் மக்களின் பொருளாதார விடயத்தில் தாக்கம் செலுத்துகின்றது.இதனை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்பதை நாம் திட்டமிட்டுள்ளோம்.எதிர்வரும் காலங்களில் சம்மாந்துறை பிரதேச சபையை எமது அணி கைப்பற்றியதுடன் மாட்டு இறைச்சியின் விலையை உடனடியாக 1200 ருபாவாக குறைக்கவுள்ளோம்.தமிழ் பேசும் மக்கள் அரசியல் அனாதைகளாக தற்போது இருக்கின்ற நிலையில் அதனை நிவர்த்தி செய்ய நாம் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் பொருளாதார ரீதியான அபிவிருத்தி முன்னெடுப்புடன் பாரிய உரிமை இருப்பு சார்ந்த விடயங்களையும் இளைஞர்களின் வேலைவாய்ப்பினையும் முன்னெடுக்கவுள்ளோம்.எம் மதமும் சம்மதம் என்ற நிலையில் எமது வேலைத்திட்டங்கள் அமையும் என நம்பிக்கை வெளியிட்டார்.

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி முதலிடத்தை பெற்றது










(ஏ.எல்.எம்.ஷினாஸ், எம்.என்.எம்.அப்ராஸ், எஸ்.அஷ்ரப்கான், எம்.எம்.ஜபீர், எம்.வை.அமீர்)

கல்முனை தொகுதி முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூரின் பணிகளை தொட்டுச் செல்லும் ஏ. ஆர். மன்சூர் பவுண்டேஷனின் அனுசரணையில் அறம் வலையமைப்பு நடாத்திய மாபெரும் 'அறிவுச்சுடர்' போட்டித் தொடரின் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சியும் அந்நிறுவனத்தின் தலைவியும் அவுஸ்திரேலிய முஸ்லிம் கவுன்சில் தலைவியும் மன்சூரின் புதல்வியுமான சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுடீன் தலைமையில் (21) சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலையத்துக்கு உட்பட்ட எட்டு தேசிய பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட 'அறிவுச்சுடர்' போட்டித் தொடரில் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்த முதல் மூன்று பாடசாலைகளின் மாணவ குழுக்களுக்கு வெற்றி கிண்ணங்கள், பணப்பரிசல்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்ட அதேவேளை சுற்றுத்தொடரில் பங்குகொண்ட பாடசாலைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

புள்ளிகள் அடிப்படையில் போட்டித் தொடரில் முதலிடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியும் (தேசிய பாடசாலை) பெற்று ரூபா 50,000.00 பணப்பரிசை வென்றது, இரண்டாமிடத்தை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியும்(தேசிய பாடசாலை) பெற்று ரூபா 40,000.00 பணப்பரிசை வென்றது , மூன்றாம் இடத்தை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை (தேசிய பாடசாலை) பெற்று ரூபா 30,000.00 பணப்பரிசை வென்றது.

நிகழ்வில் அறம் வலையமைப்பின் ஸ்தாபகர் டொக்டர் சிஹாபுடீன் நளிமுடீன், கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை கல்வி வலய கணக்காளர் வை.ஹபீபுல்லா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜிஹானா ஆலிப், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன், தென்கிழக்கு பல்கலைக் கழக பேராசிரியர் சபீனா இம்தியாஸ், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு, அல்-ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யு.எல்.நசார் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷன் அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்துக்கு ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனினால் போட்டோ கொப்பி இயந்திரம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது. 'அறிவுச்சுடர்' போட்டித் தொடரை அறிவிப்பாளர் ரோஷன் அஷ்ரப் தொகுத்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நோய் தாக்கம் விவசாயிகள் எச்சரிக்கை

## விவசாய பணிப்பாளரான திருமதி சக்கிலா பானு



( வாஸ் கூஞ்ஞ)

தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கைகளுக்கு நோய் அபாயம் தோன்றியுள்ளதால் விவசாயிகள் இவற்றை கண்டுணர்ந்தால் உடனடியாக அயலிலுள்ள விவசாய போதனாசிரியர்களை நாடவும் என மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளரான திருமதி சக்கிலா பானு இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளரான திருமதி சக்கிலா பானு மேலும் தெரிவிக்கையில்

தற்பொழுது அன்மைக்காலமாக நாட்டில் வயல்களில் மஞ்சள் நிறமாதல் நோய் காணப்பட்டு வருகின்றது.

பணிபூச்சித்தாக்கம் அல்லது கபிலநிற புள்ளி நோய் அல்லது வேர் முடிச்சு வட்ட நோய் ஆகியனவையின் தாக்கமே என அறியக்கூடியதாக இருக்கின்றது.

இந்த வேர்முடிச்சு வட்டப்புழு என்பது இவ்வளவு காலமும் மரக்கறி மற்றும் மேட்டுப் பயிர் செய்கையிலேயே தாக்கத்தை உருவாக்கி வந்துள்ளது.

ஆனால் இவ் நோய் தற்பொழுது நெற்பயிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

இவ் தாக்கம் எற்பட்டுள்ளது என விவசாயிகள் அடையாளம் காணுவது எவ்வாறு என தெரிவிக்கும்போது புதிதாக உருவாகும் இலைகள் சிதைந்து விழிம்புகள் சுறுண்டு வளர்ச்சி குன்றிக் காணப்படும்.

அத்துடன் இவ் தாக்க்த்தினால் வயல் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

அதிகமாக பாதிக்கப்பட்ட வயல்கள் நாற்றுக்கள் எல்லாம் கதிர்வரும் பருவத்துக்கு முன்னரே இவைகள் முதிர்ச்சி அடைந்துவிடும். கபில நிறமாக வயல் மாறிவிடும்.

கபிலநிறப்புள்ளி நோய் ஏற்பட்டாலும் இங்கு வட்டப்புழு தாக்கமும் இருப்தாக கருதலாம். இவ் நோயை கண்டுபிடிப்பதற்கு தாக்கம் எற்பட்ட இவ் பயிரை பிடுங்கி பார்க்கும்போது இதனி வேரில் கொக்கி பெட் விதமான அமைப்பில் பழுப்பு நிறமான உருண்ட வித திரச்சிகள் அல்லது சிறிய முடிச்சுக்கள் காணப்படும்.

வட்டப்புழு என்ற நோய் நீர்பாசம் செய்யப்பட்ட அல்லது வெள்ளப்படுத்திய நீரிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆகவே வயல்களுக்கு நீர்பாசனம் செய்யப்படும்போது தனித்தனி வயலாக நீர்பாசனம் செய்யப்பட வேண்டும்.

குறிப்பாக ஒரு வயலிருந்து இன்னொரு வயலுக்கு நீரைக் கடத்தாமல் தனித்தனி வயலாகவே நீர்பாசம் மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து ஒரு வயலில் பாவிக்கப்படும் விவசாய உபகரணங்கள் அதை பாவித்தப்பின் மற்றைய வயலுக்கு பாவிக்கப்படும் போது அவைகளை நன்கு சுத்தம் செய்த பின்பே மீண்டும் பாவிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு விவசாயிகளும் ஒரு வயலில் வேலை செய்தபின்பு உடன் மற்றைய வயலுக்கு வேலைக்குச் செல்லும்போது தங்கள் கை கால்களை சுத்தம் செய்த பின்பே வயலுக்குள் இறங்க வேண்டும்.

மேலும் சிபாரிசு செய்யப்பட்ட சமநிலையான பசளைகள் பாவிக்கப்பட வேண்டும். பசளைகள் கூடுதலாகவோ அல்லது குறைவாகப் பாவித்தாலும் வயலுக்கு பாதிப்புக்கள் ஏற்படும்.

விவசாயிகள் உங்கள் பகுதி விவசாயத்தில் இவ்வாறான தாக்கங்கள் எற்பட்டால் உடனடியாக அயலிலுள்ள விவசாய போதனாசிரியர்களை நாடவும். அல்லது தன்னுடன் தொடர்பு கொள்ளும்படி மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளரான திருமதி சக்கிலா பானு இவ்வாறு தெரிவித்தார்.



# இன வன்செயல்களால் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்ற தமிழ் கிராமங்களில் இவ்வருடம் கூடுதலான வேலை திட்டம்

## அம்பாறை மாவட்ட சமாசம் தீர்மானம்

மல்லிகைத்தீவு நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் இன வன்செயல்கள் காரணமாக பாதிப்புகளை தொடர்ந்தும் எதிர்கொண்டு வருகின்ற தமிழ் கிராமங்களில் வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களை இவ்வருடத்தில் முன்னுரிமைப்படுத்தி மேற்கொள்வதற்கு அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசம் நேற்று திங்கட்கிழமை தீர்மானம் எடுத்தது.

சமாசத்தின் புதிய பணிப்பாளர் சபை தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் கல்முனை தலைமையகத்தில் முதன்முதலாக கூடியது.

இதன்போது இவ்வாண்டுக்கான வேலை திட்டங்கள் குறித்து ஆலோசித்தனர்.

அப்போதே இம்மாவட்டத்தில் இன வன் செயல்கள் காரணமாக பாதிப்புகளை தொடர்ந்தும் எதிர்கொண்டு வருகின்ற தமிழ் கிராமங்களை அடையாளம்கண்டு முன்னிலைப் படுத்தி அங்கு வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களை புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களின் பங்களிப்பில் மேற்கொள்வது என்று ஒரு மனதாக முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.















# கல்முனையில் முதல் முதலாக வீடு பராமரிப்பு சேவை நிலையம் ஆரம்பம்!









(வேதசகா)

கல்முனை மாநகரில் முதல் முறையாக வீடு அலங்கரிப்பு பராமரிப்பு மற்றும் வீடு அமைப்பு தொடர்பான திறன் தொழிலாளிகளை கொண்ட சேவை நிலையம் ஒன்று நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை நீதிமன்ற கட்டிட தொகுதிக்கு முன்னால் இந்த புதிய சேவை நிலையம் உரிமையாளர் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ராஜன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் பிரதி வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் எஸ் ராஜேந்திரன் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் அதனைத் திறந்து வைத்தார்கள்.

# தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே பொங்கல்







(க.ருத்திரன்)

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட விநாயகபுரம் பவள மல்லிகை முன்பள்ளியில் பொங்கல் விழா கொண்டாட்ட நிகழ்வுகள் சிறப்பாக இன்று நடைபெற்றது.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே பொங்கல் பண்டிகை என்றும் உழவர்களின் உழைப்பால் விளைந்த பொருட்களை மஞ்சள் இஞ்சி கரும்பு வெற்றிலை பாக்கு வாழைப்பழம் போன்றவற்றைப் படைத்து புதுப்பானையில் பச்சரிசி பொங்கலிட்டு பால் பொங்கும் போது 'பொங்கலோ பொங்கல்' என மகிழ்ச்சியுடன் ஓசை எழுப்பி தைப்பொங்கல் தினம் கொண்டாடப்படுகிறது என்ற விடயத்தை முன்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்கள்; சிறுவயதிலே அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இப் பொங்கல் விழா நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான பாரம்பரிய விளையாட்டு நிகழ்சிகள் நடைபெற்றது.பிரதேச அபிவிருத்தி வங்கி வாழைச்சேனை கிளையினால் பரிசில்களும் சேமிப்பு பழக்கத்தை தூண்டுவதற்கான உண்டியல்கள் வழங்கப்பட்டன.

முன்பள்ளி ஆசிரியர் திருமதி கா.கவிதா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் ஆர்.சர்வேஸ்வரன், சமூர்த்தி மகா சங்க அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் என்.கீதா மற்றும் விநாயகபுர பொது நுலகத்தின் நூலக பொறுப்பாளர் ஏ.அருமைநாயகம் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதற்கான அனுசரணையை வாழைச்சேனை பிரதேச அபிவிருத்தி வங்கி வழங்கியிருந்தது.




# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று 23 ஆம் திகதி ஆரம்பம்









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கடந்த வருடத்தில் கொவிட் தொற்று நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று 23 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி பெப்ரவரி 17ஆம் திகதி நிறைவடைய உள்ளதாகவும் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 மத்திய நிலையங்களும்

63 பரீட்சை மத்திய நிலையங்களும்

சிங்களம் மொழி மூலம் -2

தமிழ் மொழி மூலம் -9018

ஆங்கில மொழி மூலம் -24 பரீட்சாத்திகளும்

ஆண்கள் -3789

பெண்கள்-5187

தனியார் பரீட்சாத்திகள்-1912

பாடசாலை பரீட்சாத்திகள்-7132 இம்முறை பரீட்சைக்கு தோற்வுள்ளனர்

இதனைத்தொடர்ந்து பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் இடையறாத மின் சேவையை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இலங்கை மின்சாரசபை சாதகமான பதிலை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய நாடளாவிய ரீதியில் 2,200 பரீட்சை நிலையங்களும், 317 ஒருங்கிணைப்பு நிலையங்களும், 32 பிராந்திய சேவை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

இம்முறை பாடசாலையூடாக 2 இலட்சத்து 78,196 பரீட்சாத்திகளும், 53,513 தனியார் பரீட்சாத்திகளுமாக 3 இலட்சத்து 31,709 பேர் உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

# தமிழர் பாரம்பரிய கலாசார பண்பாட்டு ஊர்வல நிகழ்வுடன் சிறப்பாக நடைபெற்ற கோறளைப்பற்று பிரதேச தைப்பொங்கல் விழா






















**(ஷோபனா ஜெகதீஸ்வரன்)**

கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் தைப்பொங்கல் விழா 20.01.2023 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிரதேச செயலாளர் திருமதி. ஜெயானந்தி திருச்செல்வம் அவர்களின் தலைமையில் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலாசார பண்பாட்டு ஊர்வல நிகழ்வு மற்றும் கலை நிகழ்வுகளுடன் முறாவோடை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வளாகத்தில் கோறளைப்பற்று பிரதேசத்தின் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடனும் முறாவோடை கிராமத்தின் சமயஇசமூக அமைப்புக்களின் பூரண ஒத்துழைப்புடனும் கோலாகலமாக இடம்பெற்றது.